பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்



சோலிட்

பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூபா 3/50

When only The best is Good_Enough



Buy Solide Pumps

சுடர்: 5 சுக்கில ஆு மாசி மீ 14 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 29 (26 - 02 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 19

# 'ஈழம்' ஒன்றே நிரந்தரத் தீர்வு!

## ஈரோஸ் பாலகுமார் பேட்டி

புதுடில்லி, பெப். 26

"ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் ஈழம் ஒன்றே நிரந்தரத் தீர்வாகும்; ஏனைய யோசனைகள் ஓர் இடைக்கால ஏற்பாடாகவே இருக்க முடியும்.

'ஈழம்' என்பது எதிர்காலத்தில் நனவாகிவிடும். அது எவ்வளவு காலத்தில் என்பதுதான் தற்போதைய கேள்வி".

— இப்படிக் கூறினார் ஈரோஸ் பிரமுகர் திரு. வேலுப்பிள்ளை பாலகுமார்.

"இலங்கை — இந்திய ஒப்பந்தம் இப்பொழுது அவுட்" — என்றும் அவர் சொன்னார்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியுடன் பேச்சுக்கள் நடத்த இங்கு சென்றிருந்த சமயத்தில் ஈரோஸ் பிரமுகர் திரு. வே. பாலகுமார் 'த இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' சஞ்சிகைக்கு பேட்டியளித்தார்.

அந்தப் பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார். விவரம்வருமாறு:-

கேள்வி: தமிழக முதலமைச்சர் கருணாநிதியுடனான முதற் சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்துவிட்டன. பலன் என்ன?

பாலகுமார்: இலங்கைப் பிரச்சினை குறித்து தெளிவான பார்வையை அவர் கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது. அரசியல் அபிலாஷைகளின் வரையறைக்கு அப்பால் அவரின் பார்வை அமைந்துள்ளது. செயல்திட்டம் ஒன்று பரிசீலிக்கப்படுகிறது. இது தொடர்பாக நாமும் சில ஆலோசனைகளைக் கூறியுள்ளோம்.

ஒன்று, பலாத்காரமாகத் திரட்டப்பட்ட இளைஞர்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசிய இராணுவம் கலைக்கப்பட வேண்டும். இந்த இராணுவத்தில் உள்ள இளைஞர்கள் தங்கள் எண்ணப்படி நடக்க அனுமதிக்கப்பட வேண்டும். அவர்கள் மோதலில் ஈடுபடாமல் தடுக்கப்பட வேண்டும்.

இரண்டாவது, ஒவ்வொரு குழுவிடமும் ஆயுதங்கள் உண்டு. அது சட்டவிரோதமானதாக அல்லது சட்டபூர்வமானதாக இருக்கக்கூடும். சட்டவிரோதமாக வைத்து

[5 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். அரச அதிபராக அன்ரன் அல்பிரட் நியமனம்

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ். அரசாங்க அதிபராக திரு. அன்ரன் அல்பிரட் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபராக தற்சமயம் பதவி வகித்து வரும் இவர் இவ்வாரம் பதவி ஏற்கிறார்.

யாழ். பதில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் திரு. கா. மாணிக்கவாசகர் கிளிநொச்சி அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-3)

# மட்டுநகர் முஸ்லிம் பிரமுகர்களுடன் அரசு-புலிகள் கூட்டாக சந்திப்பு!

## நாளைய நிகழ்ச்சியில் பங்குபற்ற ஹமீத் கிழக்கு விஜயம்!

— உதயன் மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, பெப். 26

கிழக்கிலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்களுடன் அரசு—விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் நேரடியாகச் சந்தித்து பேச்சுநடத்துவர்.

இத்தகைய முதலாவது சந்திப்பு நாளை (செவ்வாய்க்கிழமை) காலை பத்துமணிக்கு மட்டக்களப்பில் உள்ள விடுதலைப் புலிகளின் காரியாலயத்தில் நடைபெறும்.

இந்தச் சந்திப்பின் போது அரசாங்கத் தரப்பில் உயர் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் பங்குபற்றுவார். இதற்காக அவர் நாளை மட்டக்களப்பு செல்வார்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் புலிகளின் உயர்மட்டக் குழு ஒன்று பங்குபற்றும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் சமூக, சமய பிரமுகர்கள் பெருமளவில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சந்திப்பின்போது இப்பகுதி முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவற்றை அணுகவேண்டிய முறை, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை குறித்து அலசி ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்கள் வாழும் இடங்களுக்கே போய், அவர்களை அரசு—புலிகள் பிரதிநிதிகள் கூட்டாக சந்தித்துப் பேசி தீர்ப்பு காண்பது என்று புலிகள் மற்றும் அரசு தரப்பில் இணைந்து தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் முதலாவது சந்திப்பு நாளை மட்டக்களப்பில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-21)

## பயிலுநர் ஆசிரியர் நியமனம்; கிழக்கில் இடைநிறுத்தம்!

கொழும்பு, பெப் 26

கிழக்கு மாகாணத்தில் கல்முனை உட்பட சில மாவட்டங்களில் பயிலுநர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும் நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதில் மோசடி இடம்பெற்றிருப்பதாக கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு புகார் செய்யப்பட்டிருப்பதை அடுத்தே நியமன நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

பயிலுநர் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்ட விதம் குறித்து விசாரணைகள் நடைபெறவிருப்பதாகவும் அறிய வந்தது. (உ)

## 13,900 பேர் காவலில்!

கொழும்பு, பெப் 26

தென்னிலங்கையில் தற்போது 13 ஆயிரத்து 900 பேர் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு படையினரின் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக அரசு வெளியிட்ட குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## கட்டுடையில் இளம் பெண் பலி

அரிவு வெட்டி முடிந்து குளத்திற்குக் குளிக்கச் சென்ற இளம் பெண் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

இச்சம்பவம் நேற்று மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் நடைபெற்றது,

18 வயது மதிக்கத்தக்க அந்தப் பெண்ணின் சடலம் நேற்று மாலைவரை கண்டு பிடிக்கப்படவில்லை. (ஒ)

## முச்சந்தி முரளி



கிழக்கிலை வாத்திமார் நியமனம் இடைநிறுத்தமாம்.... அப்ப வடக்கிலை என்ன ஆகுமோ...?

## மனித உரிமை மீறல் பற்றி ஆராய பிரதான எதிர்க்கட்சிகள் இன்று கொழும்பில் மாநாடு

கொழும்பு, பெப். 26

மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இன்று கொழும்பில் கூட்டியிருக்கும் எதிர்க்கட்சி மாநாட்டில் பிரதான எதிர்க்கட்சிகள் யாவும் பங்குபற்றும் எனத் தெரியவருகிறது.

மக்கள் ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், லிபரல் கட்சி முதலியவை இந்த மாநாட்டில் பங்குபற்றும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் —

மாநாட்டில் பங்குபற்றுவது என்பது மனித உரிமைகள் மீறல் பற்றிய விடயங்களை ஆராய்வதற்கு மட்டுமே என்றும் —

எதிர்க்கட்சிகள் அமைப்பு ரீதியாக இணைந்து செயற்படுவதற்காகஅல்ல என்றும்—

இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த மாநாட்டில் பங்கு

(5ஆம் பக்கம் பார்க்க)

## இரவு 8 வரை திறக்க கோரிக்கை

யாழ். பல்கலைக்கழக நூலகத்தை இரவு எட்டுமணிவரை திறந்துவைக்கும் படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலைமை சீரடைந்துள்ளதால் கலைப்பீடமாணவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (இ-3)

# தற்போதைய நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தையே இலங்கை அரசால் நம்ப முடியும்

## அமைச்சர் தொண்டமான் பேட்டி

கொழும்பு, பெப். 26

தற்போதைய நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மட்டுமே இலங்கை அரசால் நம்பமுடியும்.

அமைச்சர் தொண்டமான் புதுடில்லியில் இருந்து கொழும்பு திரும்பிய பின்னர் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதுடில்லி சென்றிருந்த சமயம் அமைச்சர் தொண்டமான் இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ராலைச் சந்தித்து அவருடன் இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் கூறியிருப்பதாவது;

இந்திய அமைச்சருடன் தாயகம் திரும்பும் தோட்டத் தொழிலாளரின் புனர்வாழ்வு பற்றிப் பேசினேன். அனுதாபத்துடன் கேட்ட அமைச்சர் குஜ்ரால், வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி என்னிடம் விசாரித்தார்.

ஜனாதிபதி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் அக்கறையாக இருப்பதாக நான் அவருக்குச் சொன்னேன்.

அதற்கு அமைச்சர் குஜ்ரால், "புதுடில்லிக்கு வரும் இலங்கை அரசுக் குழுவினர் இங்கு ஒன்றுக்கு இணக்கம் தெரிவித்துவிட்டு, கொழும்புதிரும்பிய பின்னர் சொன்ன சொல்லுக்கு முரணாக நடக்கின்றனர்" — என்று என்னிடம் கேட்டார்.

"ஏற்றுக்கொண்ட உடன்பாட்டை கொழும்பு திரும்பிய பின்னர் செயல்படுத்தாத இலங்கை அரசுக் குழு பின்னர் ஏன் இங்கு நிற்கும்போது அதற்கு இணக்கம் தெரிவிக்கிறார்கள்," என்றும் அமைச்சர் குஜ்ரால் கேட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவு ஒப்பந்தம் தேவை என்று இலங்கை தான் கேட்டது; இந்தியாவல்ல என்றும் குஜ்ரால் சொன்னார்.

"நட்புறவு ஒப்பந்தத்தை உருவாக்க விசேட ஒழுங்கு

(5ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் உல்லாசப் பயணிகள்

யாழ்ப்பாணம், பெப். 26

நீண்டகால இடைவெளிக்குப்பின் உல்லாசப் பயணிகள் தற்போது யாழ்ப்பாணம் வர ஆரம்பித்துள்ளனர்.

சுவிஸ், ஆஸ்திரேலியா, பிரிட்டிஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களை தற்போது யாழ். நகரப்பகுதிகளில் காணக்கூடியதாகஇருக்கிறது.

இவர்கள் பல இடங்களையும் சுற்றிப் பார்வையிடுகின்றனர். (உ-3)

## சுபநேரம்

26—02—1990

திங்கட்கிழமை மாசி 14

சுபநேரம்:

12 . 29 முதல் 1 . 59 வரை

ராகுகாலம்:

7 . 59 முதல் 9 . 29 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்.

## கல்முனை, பொலனறுவையில் நெல் சாகுபடி பெரும் பாதிப்பு

கொழும்பு, பெப். 26

பொலனறுவை மாவட்டத்திலும், கல்முனைப் பகுதியிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணியில் நெல் சாகுபடி ஒருவித பூச்சி நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டு அழிவு நிலையிலிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பொலனறுவை மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கரிலும், கல்முனையில் சுமார் 25ஆயிரம் ஏக்கர் வரையும் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# இறுதிக்கட்டப் பேச்சுக்களில் பிரபாவும் பங்குபற்றக் கூடும்!

கொழும்பு, பெப். 26

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனும் பங்குபற்றக் கூடும்.

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அப்பேட்டியில்இடம்பெற்ற சில கேள்வி - பதில்கள் வருமாறு:-

கேள்வி: அமைதிப் படை விலகிய பின்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை என்ன செய்வர்!

பதில்: ஆயுதத்தின் தேவை எமக்கு ஏற்படாது.

கேள்வி: நீங்கள் ஆயுதங்களை இலங்கை அரசிடம் ஒப்படைப்பீர்களா?

பதில்: அரசுடன் தொடர்ந்து விடுதலைப் புலிகள் பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர். இதன் முடிவில் ஆயுதங்கள் பற்றி ஒரு முடிவு எடுப்போம்.

கேள்வி: 'றோ'வின் நடவடிக்கைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: வடக்கு - கிழக்கில் இப்போது 'றோ' ஏஜண்டுகளோ அல்லது அவர்களின் அனுதாபிகளோ கிடையாது. கொழும்பில் இருந்து 'றோ' ஏஜண்டுகள் இயங்கலாம்.

கேள்வி: விரைவில் நடத்தப்படவுள்ள வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் சிங்கள அகதி மக்களை மீண்டும் குடியமர்த்த அனுமதிக்கப்படுமா?

பதில்: வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகம் என்று நாம் நம்புகின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் தாய்நாடும் இதுவே. சிங்கள மக்கள் குடியமர்த்தப்படும்போது தமிழர் தம் காணிகளை இழக்கின்றனர்.

எப்படியாயினும் இந்த விஷயம் குறித்தும் அரசுடன் பேசி வருகிறோம். பேச்சுக்களின் பின்னர் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.

கேள்வி: அமைதிப்படை சென்ற பின்னர் இலங்கை பொலீஸார் மற்றும் ஆயுதப்

(5ஆம் பக்கம் பார்க்க)

## ஈரோஸ் எம். பிக்கள் எவரும் நாடாளுமன்றம் வரவில்லை!

கொழும்பு, பெப் 26

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற எந்த ஒரு நிகழ்ச்சியிலும் ஈரோஸ் எம். பிக்கள் எவரும் பங்குபற்றவில்லை.

ஈரோஸ் எம். பிக்களின் ராஜினாமா விடயம் மற்றும் எம். பிக்களை மாற்றுவது ஆகியன குறித்து இதுவரை எந்தவித தீர்க்கமான முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புத்தம் புதிய Eastern Bicycle விற்பனைக்கு உண்டு. எல்லா உபகரணங்களுடன் தொடர்பு கொள்க. S. Pavendra 47, Temple Road, Jaffna. (2653)

Honda Reconditioned C 90, MD 90 CD 90 C50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. Anton Enterprises 390, மெயின் வீதி பஸ்ரியன் சந்தி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (11914)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப்புத்தகங்கள், சபாப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (மண்டேலா ரேடர்புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம் (1551)

J.V.C. 70E வீடியோ கமெரா W.V.P. 100 வீடியோ கமெரா N.V 100 Portable வீடியோ டெக் என்பன விற்பனைக்கு உண்டு. வாணி வீடியோ ஹோம், கே. கே. எஸ் வீதி, வல்வெட்டித்துறை. (2587)

## கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Unsex) தனி சிகப்பு கறுப்பு நிற சேவல் பேடு (பிலிமத்), கறுப்பு வரிசேவல், (Dekalb) பிறவுண் பேடு, சேவல் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (28-2-90) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா ஒழுங்கை, சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில். (11850)

## தேவை

மனேஜர், சப்ளையர்கள் கோக்கி, கையாள், அரைப்பவர் உடன் எமது சைவ ஹோட்டலுக்குத் தேவை. தங்குமிட வசதியுண்டு. ஹோட்டல் வேலை அனுபவமுடையவர்கள்உடன் நேரில் வரவும். வெ. பக்கீர்சாமி ராஜாமணி ஹோட்டல் 375, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2214)

பெண் காசாளர் தேவை. நேரில் வரவும். துர்க்கா டிரேடர்ஸ் 85, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (2652)

## தேவை

வீடியோ கிளப்பில் வேலை செய்ய பெண் குமாஸ்தா தேவை. அத்துடன் தையல் வேலையில் அனுபவமும் கட்டிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. S.T.L வீடியோ கிளப், NO.3 நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி. (2649)

யாழ். இந்து வேளாள 32, வயது நிரம்பிய கோப்பிறட்டி இன்ஸ்பெக்டருக்கு செவ்வாய் குற்றமற்ற ஆசிரியப்பெண் விரும்பத்தக்கது. நட்சத்திரம் புனர்பூசம். 30, நிரம்பிய B.Sc. சிவில் என்ஜினியருக்கு நட்சத்திரம் மிருகசீரிடப்பெண் தேவை. தொடர்பு: ABCDE விவாக பொருத்துனர் 328, நாவலர்றோட்ஆனைப்பந்தி. (11867)

## வீடு தேவை

அரச பணியில் உள்ள ஒரு குடும்பத்துக்கு அடிப்படை வசதிகள் கொண்ட வீடு ஒன்று குத்தகைக்கு அல்லது வாடகைக்குதேவை. நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்க. ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3898)

## தவறிவிட்டது

650521919 இலக்கமுடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (11875)

## வகுப்புகள்

பாலர் முதல் பல்கலைக்கழகத் தரம் வரை தொழிலாளர், க. பொ. த. பழைய புதிய திட்ட, ஆங்கிலம் பயிற்றும் நிபுணர் நிறுவனம். பாட்டு, வயலின், மிருதங்கம், நாட்டியம் தொடர்பு கயிலாயநாதன் கலாநிலையம் மாவடிச் சந்தி வட்டுக்கோட்டை. (11908)

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆருட மாந்திரீகமுறைப்படி அரச அங்கீகாரம் பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: ''சக்தி சரவணா 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (2641)

## காஸ் குக்கர் திருத்த

உங்களுடைய GAS குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப்பாகங்கள் மாற்ற வேண்டுமா? எதுவாயினும் மிகத்திறமையான முறையில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். அதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம் D· முஸ்தபா யுப்ளிபஸார் 2 ஆம் மாடி யாழ்ப்பாணம். (1996)

## போட்டோஸ்ரட்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம் (C/3717)

தங்கள் சகல பத்திரங்களையும் மிகவும் தெளிவான முறையில் போட்டோஸ்ரற் செய்து கொள்ளவும், ஆங்கிலத் தட்டெழுத்து செய்து கொள்ளவும் வாணி வீடியோ ஹோம், கே. கே. எஸ். வீதி, வல்வெட்டித்துறை. (2588)

## உடைந்த தபால் பெட்டி

நெடுங்கேணி, பெப் 26

நெடுங்கேணிபிரதம தபால் நிலையத்திற்கு முன்னால் இருக்கும் கொங்கிறீட் தபால் பெட்டி உடைந்து ஒரு வருடமாகியும் திருத்தப்படாமல் பாதுகாப்பற்ற நிலையில் இருந்து வருகிறது. இதனால் பொதுமக்கள் தபால்களை போடுவதற்கு அஞ்சுகின்றனர். (க-108)

## பிறந்த நாள் வாழ்த்து



செல்வன்
**மன்சூர் நிஸாமி முகமட்**

யாழ்ப்பாணம் சோனக தெருவைச் சேர்ந்த மன்சூர் - நூர்ஜஹான் தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிஸாமி முகமட் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (26-02-90) தமதில்லத்தில் கொண்டாடுகிறார்.

நிஸாமி பல்கலையும் பயின்று பல்லாண்டு காலம் வாழ வாப்பா, உம்மா, அப்பா, வாப்பச்சிமார், உம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சாச்சாமார், சாச்சிமார், மாமாமார் மாமிமார், மச்சிமார், நிஸ்மா, சகினா, சனாஜா, ஸயினாபானு, மச்சான்மார், அஸாத், அர்ஷர், முன்சித்மாகிர், நானாமார், தாத்தாமார், ஆகியோர் வாழ்த்துகின்றார்கள். [2644]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி**
(புத்தூர் கோபால் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)


தோற்றம்: 15 - 06 - 1926 மறைவு: 26 - 02 - 1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே, எங்களையெல்லாம் உயரவைத்த உத்தமரே! நீங்கள் எங்களைப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப் பிரியாது.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோபால் ஸ்ரோர்ஸ்,
புத்தூர். (2618)

## 31ம் நாள் கண்ணீர் அஞ்சலி



**அமரர் கந்தையா செல்லத்துரை**


மண்ணில்: 31 — 03 — 1921 விண்ணில்: 27 — 01 — 1990

எங்கள் தெய்வமே!
வாழ்ந்தது போதுமென்றோ
வையகத்தை நீ துறந்தாய்?
உழலுவது நாமென்றோ
வானிலே நீ பறந்தாய்!
கண்ணீரில் தினம் நனைந்து
ஏங்கியுனைத் தேடுகின்றோம்
கனவிலேனும் நீ வந்து எம்
விழி நீரைத் துடைக்காயோ ......?

துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர்கள்.

பழைய வீதி,
கோப்பாய். [2634]

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பு



**அமரர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை**

தோற்றம்: 30 — 07 — 1908 மறைவு: 25 — 01 — 1990

எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய அல்வாய் வடக்கு அரசடியானை பிரார்த்திக்கின்றோம்.

துன்னாலை தெற்கு ''ஆயர்பாடி'' இல்லத்தில் நடைபெறும் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பாய் வேண்டுகின்றோம்.

திருமதி த. கமலாவதி, வே. கருணாநிதி,
வே. சிவயோகன், வே. செல்வயோகநாதன்.

'கனகவேல்'
அல்வாய் வடக்கு,
[illegible] [11877]

## HOLY FAMILY CONVENT
JAFFNA.

## PRIVATE CLASSES

1. மனைப் பொருளியல் டிப்ளோமா [ஒரு வருடம்]
2. தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல் வகுப்புகள் (ஆங்கிலம் - தமிழ்)

1. மனைப் பொருளியல் வகுப்புகள் பாடங்கள்: தையல், பூப்போடல், உடைகள் தயாரித்தல், சமையல், கேக், ஐசிங், முதலுதவி, குழந்தைகள் பராமரிப்பு, கைப்பணிகள், மக்கறோம், பெயின்ரிங்.

குறுகிய காலப் பயிற்சி: 3 மாதம் தையல், கேக் ஐசிங்

✶ சான்றிதழ்கள் வழங்கப்படும் ✶

2. ஆங்கில தமிழ்: தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல் ஆங்கில வகுப்புகள் நடைபெறும்.

● லண்டன் பரீட்சைகள் நடத்தப்படும். பரீட்சைக்கு ஆயத்த வகுப்புகள் தொடங்கிவிட்டன.

SISTER SUPERIOR

[சி-3913]

## Walk - in - Interview

Suitable Candidates are invited for an walk-in Interview to fill the following Vacancies:-

1. **Cashier Cum Bill Clerk Male/Female:**
   Knowledge of Accounts must be Proficient in English.
2. **Accounts Clerk:**
   Male/Female knowledge of Accounts and Book-keeping.

**Age Limit: 20years to 30 years**

Please Call over between 10 a.m. to 5 p.m. on 25th & 27th Feb. 90 with written Application along with relevent document.

# Hotel Gnanams

**299, Clock Tower Road, Jaffna.**

[C-3914]

## 6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**கந்தையா செல்லத்துரை**
**(பொன்னம்பலம் அன்சன்ஸ் உரிமையாளர் தலவாக்கொல்லை)**
**மறைவு: 05 - 03 - 1984**

ஆறு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அன்பும் பண்பும் எங்கள் மனதை விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
திருமதி பு. செல்லத்துரை (தேவி)
செ. ராஜ சுரேஸ், செ.சுரேஸ்ராஜா

புவனவாசம்
உடுவில் தெற்கு,
சுன்னாகம். (2597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு.

**பொருள்:**

வாழவழி இல்லாதபோதும் இரந்து கேட்ட உடன் படாத சால்பு' உலகத்தில் இடமெல்லாம் கொள்ளாத அவ்வளவு பெருமையுடையதாகும்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
26- 02- 1990 த. பெ.இலக்கம் : 23


## அச்சம் நீக்க வழி....!

அமைதிப்படையினர் வெளியேறிய பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளும் விடயத்தில் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் உடன்பாடு கண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தலைமையிலான அரசாங்கக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கக் குழுவுக்கும் இடையில் கடந்த வியாழன் இரவு ஜனாதிபதியின் சுசரித்த வாசஸ்தலத்தில் நடந்த பேச்சுவார்த்தையின் போது இந்த உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற தொடரான பேச்சுவார்த்தைகளின் ஒரு திருப்பு முனையாக இந்த பேச்சுவார்த்தை கருதப்படுகிறது.

முதல் தடவையாக தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களில் ஒருவரான திரு. மாத்தயா இதில் கலந்து கொண்டிருக்கிறார். இது ஒரு நல்ல அறிகுறியே. முரண்பாட்டு இடைவெளிகள் குறைவதையே இது காட்டுகிறது. முன்னேற்றமான சூழ்நிலைகள் தென்படுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் இடையில் மோதல் உருவாகலாம் என்ற அச்ச நிலை வடக்கு - கிழக்கில் இருந்து இந்திய அமைதிப்படையினர் வெளியேற ஆரம்பித்த நாள் முதல் தமிழ், முஸ்லிம் மக்களிடையே நிலவி வருகிறது.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்காப் படையினரின் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களையும் அதன் பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய அமைதிப் படையினரின் வருகையை அடுத்து இடம்பெற்ற சம்பவங்களையும் எதிர்நோக்கிய எமது மக்களுக்கு இப்படியான அச்ச உணர்வு ஏற்படுவதில் வியப்பு இல்லை.

இந்த அச்ச உணர்வைப் போக்கும் விதத்தில் இலங்கை அரச தரப்புக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கும் இடையிலான பேச்சு அமைந்தது வரவேற்கத்தக்கதே.

தமிழ் - முஸ்லிம் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கத் தாம் விரும்புவதாகவும் இராணுவ அணுகு முறையில் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் அப்படியான நிலை ஒரு போதும் ஏற்படாமல் தான் பார்த்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இந்தப் பேச்சுவார்த்தையின்போது தெட்டத் தெளிவாகக் கூறி இருக்கிறார்.

தெற்கிலும் வடக்கிலும் கடந்த காலங்களில் ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அரசியல் படுகொலைகள் உச்சக் கட்டத்தை அடைந்து அரசாங்கமே ஆட்டம் காணும் நிலைமை உருவாகி இருந்தது.

இப்படியான கசப்பான அனுபவங்களைக் கடந்து வந்த நிலையில் ஜனாதிபதிக்கு தற்போது இந்த புதிய ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி இதனைச் செயலிலும் காட்ட வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் முழு அளவில் பூர்த்தி செய்யப்படும் நிலைமை ஏற்படும் போதே ஸ்ரீலங்கா அரசு குறித்தும் ஸ்ரீலங்கா இராணுவம் குறித்தும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இருந்துவரும் அச்ச உணர்வு முழுமையாக நீங்கும்.

# கிளிநொச்சியில் கூலியாட்கள் இன்றி நெல் அறுவடை பாதிப்பு

கிளிநொச்சி பெப் [illegible] கிளிநொச்சியில் கூலியாட்கள் தட்டுப்பாடு காரணமாக நெல் அறுவடை பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பல வயல்கள் அறுவடை செய்யப்படாமல்விடப் பட்டுள்ளன.

அறுவடைக்கான கட்டணமும் மிக உச்சம் என்று தெரி[illegible] ஓர் ஏக்கர் வயலில் அறுவடை செய்வதற்கு ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து இரு நூறு ரூபா வரை கூலி கேட்கப்படுகிறதாம். சூடு அடிப்பதற்கு ஓர் இரவுக் கூலி ஒரு நபருக்கு 125 ரூபாவாகும்.

இந்தக் கட்டணத்துக்கும் கூலியாட்களைப் பெற முடியாத நிலையில் வயல் சொந்தக்காரர்கள் திண்டாடுகின்றனர்.

திடீர் மழை பெய்யும் பட்சத்தில் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது.

தற்போது இப்பகுதியில் பல்வேறு நிவாரணங்கள்வழங்கப்படுவதும் கூலிவேலைக்கு ஆட்கள் செல்வதில் அக்கறை அற்றிருக்கக் காரணம் என்று கூறப்படுகின்றது. (இ)

## சாரணர் இயக்க ஸ்தாபகர் தினம்

யாழ்ப்பாணம் பெப். 26

சாரணர் இயக்க ஸ்தாபகர் பேடன் பவளின் பிறந்த தினக் கொண்டாட்டம் 28 ஆம் திகதி புதன்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

அன்று காலை 9 மணி முதல் பேச்சு கட்டுரை கதை பாட்டுப் போட்டிகள் ஆகியன இடம்பெறும். குழு நிலையிலான போட்டிகளில் தெரிவானோர் மாவட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

மாலை நிகழ்ச்சிகள் 2 மணிக்கு ஆரம்பமாகும். உதவி மாவட்ட ஆணையாளர் திரு. டோறஸ் இராசசிங்கம் சகல சாரணக்குழுக்களையும் இவற்றில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றார். (க)

## காணாமல் போன 314மாணவர்

கொழும்பு பெப். 26

தென்பகுதியில் இதுவரை 314 பல்கலைக்கழக மாணவர்கள் காணமற் போய் விட்டனர் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

கைதாகும் பல்கலைக்கழக மாணவர்கள் பற்றி கண்காணிப்புக் குழுவுக்கு கிடைத்த தகவலில் இருந்து தெரிய வருகிறது.

291 பல்கலைக் களக மாணவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது. (உ - எ)

## தெல்லிப்பழை பாடசாலைகளில் வைத்திய பரிசோதனைகள்

காங்கேசன்துறை பெப் 26

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகார பிரிவில் பாடசாலைகளில்உள்ளமாணவர்களை வைத்திய பரிசோதனைக்குட்படுத்தும் செயல் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கமைய சுகாதார வைத்திய அதிகாரிகள் பொது சுகாதார பரிசோதகர்கள், மருத்துவமாதர்கள், சுகாதார நல தொண்டர்கள் போன்றோர் இப் பகுதியில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் விஜயம் செய்து மாணவர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

பாடசாலைமாணவர்களின் ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் மேற்கொள்ளப் படும் இந்த வைத்திய பரிசோதனை மார்ச் 31ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்படுமென தெரிவிக்கப்படுகின்றது

இந்த வைத்திய பரிசோததனை மூலம் மாணவர்களுக்கு இருக்கக் கூடிய நோய்களைக் கண்டு பிடிக்க முடியுமெனவும், பின்னர் அதற்கு சிகிச்கிசை அளிக்க வசதி ஏற்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-68)

## செஞ்சிலுவை பிராந்திய அலுவலகங்கள்

மட்டக்களப்பு பெப். 26

வட-கிழக்கு மாகாணங்களில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் இரு பிராந்திய அலுவலகங்கள் அமையவுள்ளன.

திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் அவை அமையும் என சங்கப் பிரதிநிதி யொருவர் தெரிவித்தார். (க - 21)

### பயிலுநர் ஆசிரியர் தெரிவு

## மேன்முறையீடுகள் மீதான விசாரணைகள் முடிவு!

யாழ்ப்பாணம் பெப் 26

கிளிநொச்சி கல்வி மாவட்டத்தில் பயிலுனர் ஆசிரியர் தெரிவுகளுக்கு எதிரான மேன்முறையீடுகளின் மீதான விசாரணை வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்தது.

விசாரணை முடிவடைந்ததை அடுத்து பயிலுநர் ஆசிரியர் பதவிக்கு தெரிவான 238 பேரின் பெயர்ப்பட்டியல் இன்று திருகோணமலை மாகாணசபை கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தெரிவானோர் பட்டியல் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்ட பின் இந்த வார நடுப்பகுதியில் வெளியிடப் படும். (உ- 9)

## பங்குபற்றும்

கொழும்பு, பெப். 25

இலங்கையில் மனிதஉரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெறுவது குறித்து ஆராய்வதற்காக எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாளை மறுதினம் (செவ்வாய்க்கிழமை) கூட்டியிருக்கும் எதிர்க்கட்சிகள் மாநாட்டில் ஈ. பி. ஆர், எல். எவ். பங்குபற்றும்.

இந்தக் கட்சியின் சார்பில் எம். பிக்களான திரு. கே. யோகசங்கரி, திரு. கே. பிரேமச்சந்திரன், திரு.சிவஞானம் ஆகியோர் பங்குபற்றுவர். (உ)

## 2முக்கிய விடயங்கள் குறித்து அரசு-புலிகள் பேசுவர்

கொழும்பு, பெப் 26

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் முக்கியமான இரண்டு விடயங்கள் குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெறும்எனத் தெரியவருகிறது.

★ வடக்கு, கிழக்கு மாகாணசபையைக் கலைத்து புதிதாக தேர்தல் நடத்துதல்.

★ விடுதலைப் புலிகள் தேர்தலில் பங்குபற்றுவதற்கு வசதியாக அரசமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய்தல்.

-இந்த இரண்டு விடயங்கள் குறித்தே தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெறும் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ரியூப் லைட் பொருத்தும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப் 26

யாழ் பஸ்நிலையப் பகுதியில் 'ரியூப்' லைட்டுகள் பொருத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ஒ-10)

## பொலிஸ் பொறுப்பதிகாரியை காணவில்லை

கொழும்பு, பெப் 26

கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் சப்புகஸ்கந்த பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி ரோஹித பிரியதர்சன என்பவரைக் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## செயலக ஊழியருக்கு சீசன் ரிக்கற்

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ் செயலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு செயலகத்தில் வைத்தே வட பிராந்திய போக்குவரத்துச் சபை பருவகால சீட்டுக்களை சீசன் ரிக்கட்) வழங்கும்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். செயலக உயரதிகாரிகளும், வட பிராந்திய போக்குவரத்துச் சபை [illegible] களும் மேற்கொண்டுள்ளனர். (ஒ-10)

## வவுனியா இ.போ.ச. டிப்போ: போதிய டயர்கள் இல்லை

வவுனியா, பெப். 26

வவுனியா இ. போ. ச. டிப்போவில் பஸ்களுக்குத் தேவையான போதிய டயர்கள் இல்லாத காரணத்தால் ஆறுபஸ்கள் சேவையில் ஈடுபடமுடியாத நிலையில் முடங்கிக் கிடக்கின்றன.

இந்த டிப்போவுக்கென 24 பஸ்கள் இருந்த போதிலும் போதிய உதிரிப்பாகங்கள் கிடைக்காமையினாலும், பொறியியல் பகுதியினரின் அக்கறையற்ற போக்கு காரணமாகவும் இரண்டுக்கு மேற்பட்ட பஸ்வண்டிகள் எப்போதும் நீண்ட காலத்திற்கு 'திருத்தவேலை' என்ற காரணம் காட்டி சேவையில் ஈடுபடாமல் பொறியியல் பகுதியினரிடமே முடக்கி வைக்கப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா டிப்போவுக்கு உரிய டயர்கள் பஸ்களின் திருத்த வேலைகளுக்கான உதிரிப்பாகங்கள் என்பன கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள இ. போ. ச. வட பிராந்திய அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அதன் பின்னரே, அதுவும் ஆறுதலாக வவுனியா [illegible] இன்றதாம்.

இதன் காரணமாகவும் பல[illegible] களைத் திருத்துவதிலும், தொடர்ச்சியாகப் பராமரிப்பதிலும் தேவையற்ற தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

மேலும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்களின் டயர்களும் தேய்ந்த நிலையிலேயே இருப்பதனால், புதிய டயர்கள் உடனடியாகக் கிடைக்காத பட்சத்தில் மேலும் பலபஸ்கள் 'கட்டைகள்' மீது நிற்கவேண்டிய அபாயநிலை தோன்றியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (க - 164)

## கருத்தரங்குகள்

அம்பாறை, பெப் 26

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமங்கள் தோறும் தொழில் நுட்பக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

தொழில் நுட்பக் கல்வி பெறுவதில் முஸ்லிம் இளைஞர்கள் காட்டும் ஆர்வம் இன்மையைப் போக்கி தொழில்நுட்பக் கல்வியின் முக்கியத்துவத்தை உணரச் செய்யும் நோக்குடன் இந்தக் கருத்தரங்குகள் நடத்தபடவுள்ளன.

அம்பாறை வாவட்ட முஸ்லிம் கல்வி மாநாடு விரைவில் இத்தகைய கருத்தரங்குகளை மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலும் நடத்துவதென முடிவு செய்துள்ளது. (க-14)

## பிரிவுபசாரம்

அம்பாறை, பெப் 26

கல்முனை பிரதம கல்வி அதிகாரி அலுவலகத்தில் இலிகிதர்களாகக் கடமையாற்றி யாழ்ப்பாணம்கல்வித்திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ள திருமதி. எஸ். சிவநேசன் சமூக சேவை அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுள்ள ஜனாப் ஐ. பதுறுதீன் ஆகியோருக்குமேற்படி அலுவலகத்தில் பிரிவுபசார வைபவம் ஒன்று நடத்தப் பட்டது.

கல்முனை பிரதம கல்வி அதிகாரி அல் ஹாஜ் எம்.பி. எச். முகமது தலைமையில் வைபவம் நடைபெற்றது. (க-14)

### சமய சந்நிதிகளில்

**மகாசங்காபிஷேகம்**

யாழ்ப்பாணம், பெப் 26

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு இன்று திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் மகாசங்கா அபிஷேகம்(1008) நடைபெறும். (க)

## இணுவிலில் மாசி மகம்

இணுவில் சிவகாமி அம்பாள் ஆலயத்தில் மாசி மாத இலட்சார்ச்சனை 28 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. மாசி மாத மகத்தினை ஒட்டி நடைபெறும் இவ் உற்சவ தினங்களில் மாலை அபிஷேக ஆராதனை, அர்ச்சனை ஹோமம் முதலியன நடைபெற்று அம்பாள் வீதி வலம் வருதலும் நிகழும்.

11 ஆம் திகதி பூரணை தினத்தன்று மகா தீப பூசையும் விசேட சொற்பொழிவுகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (க - 69)

## தத்துக்கிளிகளின் தாக்கத்தால் அம்பாறையில் நெற்பயிர் பாதிப்பு

அம்பாறைமாவட்டத்தின் முக்கிய கிருஷிகப் பிரிவுகளில் செய்கைபண்ணப்பட்டுள்ள காலபோக நெற் செய்கை 'அறக்கொடியா' எனப்படும் கபிலநிறத் தத்துக்கிளிகளின் தாக்கத்தால் பெரும் பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளது.

குறிப்பாக இந்தமாவட்டத்தின் முக்கிய கிருஷிகப் பிரிவுகளான நிந்தவூர், சம்மாந்துறை முதலான பகுதி விவசாயக்கண்டங்களால்மேற்படி தத்திகளின் தாக்கம் வேகமாகப் பரவி வருவதாக விவசாயப் பகுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தத்துக்கிளிகளின் தாக்கம் குறித்து விவசாயிகள் மிகவும் அவதானத்துடனிருக்குமாறும்,

ஒரு பயிரின் அடியில் ஐந்துக்கு மேற்பட்ட பூச்சிகள் காணப்பட்டால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயப்பகுதியால் சிபார்சு செய்யப்பட்ட கிருமி நாசினிகளைத் தெளிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (க - 14)

### திருமுகம்

## சேதமடைந்த பாலம்

அரியாலை நெடுங்குளம் சந்தியில் உள்ள சிறிய பாலத்தில் ஏற்பட்ட சேதம் பெரிதாகி கிடங்கு ஒன்று உருவாகி உள்ளது. சைக்கிளில் செல்வோரும் பாதசாரிகளும் இக் கிடங்கில் விழும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதைத்திருத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**பொ. சிவபாலன்**
அரியாலை.

## சாவகச்சேரி வைத்தியசாலை

தற்போது சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை ஏனோ தானோ என்ற முறையில் நடைபெற்று வருகின்றது. திறம்படக் கடமை புரியும் வைத்தியர்கள் இல்லாமையே இந்த நிலைமைக்குப் பிரதான காரணமாகும். சாவகச்சேரி வைத்திய சாலையை நன்கு செயற்பட வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

**அருள் சின்னத்தம்பி**
சாவகச்சேரி.

## பட்டதாரிகளின் சம்பளம்

1984 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின் ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் சேவையிலுள்ளபோது பட்டதாரி ஆகியிருந்தால் அவர்களுக்கு 01-10-1988 ஆம் திகதி முதல் பட்டதாரிச்சம்பளம் வழங்கப்படும் என கல்வி அமைச்சு 07-02-1989 சுற்று நிருபம் ஒன்றின் மூலம் அறிவித்தது. அதன்படி அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு 01-10-1988 இலிருந்து பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படுகிறது.

ஆனால் கண்டி மாவட்டத்திலுள்ள ஆசிரியை ஒருவருக்கு 15-07-1987 ஆம் திகதி முதல் விஞ்ஞானப்பட்டதாரி நியமனம் வழங்கி, பட்டதாரிச் சம்பளமும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அந்த ஆசிரியைபோல் நியமனம் பெற்ற மற்றைய ஆசிரியர்களுக்கு 01-10-1988 இலிருந்தே பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படுகிறது.

எனவே அரசாங்கம் 01-01-1984 க்குப் பின் நியமனம் பெற்றுசேவையிலுள்ளபோது பட்டதாரி ஆகியோருக்கு, அவர்கள் பட்டம் பெற்ற திகதியிருந்து பட்டதாரிச் சம்பளம் வழங்க ஆவன செய்ய வேண்டும். இல்லையேல் 15-07-1987இல் இருந்தாவது எம்போன்ற பட்டதாரிகளுக்குப் பட்டதாரிச்சம்பளத்தை வழங்க ஆவன செய்யவேண்டும்.

**எம். ஈ. தேவன்**
வடமராட்சி.

## தபால் பெட்டி

கெருடாவில் தெற்குப் பகுதியில் உள்ள தபாற்பெட்டி ஒன்று சீரற்ற முறையில் பாவிக்க முடியாத நிலையில் காணப்படுகிறது. சிலவேளைகளில், அப்பெட்டியில் போடப்படும் தபாற் தலைகளை சில சிறுவர்கள் எடுப்பதற்கு வசதியாக கதவு திறக்கப்பட்டும் காணப்படுகிறது சம்பந்தப்பட்ட அதிகாரிகது இப்பெட்டியைத் திருத்துவார்களா?

**சு. குணேஸ்வரன்**
தொண்டமானாறு.

## உளவளத்துறை சான்றிதழ்

யாழ்ப்பாணம், பெப் 26

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக உளவளத்துறையில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம்வரும் மார்ச் 2 ஆம்திகதி காலை 10-30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தொடர்பகத்தில் நடைபெறும்.

நோர்வேயைச்சேர்ந்தகிறிஸ் திடிகேட்இதில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (க)

### வன்னிப்பகுதியில்

## மத்தியதர குடியேற்றங்கள் ஆட்கள் இன்றி காடுவளர்கிறது

சேமமடு பெப். 26

வன்னிப்பிரதேசத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு மத்திய தர வர்க்கத்தினருக்கு அளிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாயக் காணிகள் கவனிப்பார் இன்றிக் கிடக்கின்றன. இவற்றில் வசிக்க வேண்டியவர்கள் இக் காணிகளில் இல்லை. வன் செயல்களால் இவர்கள் இடம் பெயர்ந்து சென்றிருந்தாலும் இன்று வரை அவர்கள் அவ்விடங்களுக்குத் திரும்பி வரவில்லை.

இதே சமயத்தில் நிலம் இன்றி ஆயிரக் கணக்கான மக்கள் சஷ்டம் அடைகின்றார்கள். தமக்கு ஒரு துண்டு நிலமேனும் பெற்றுத்தருமாறு வறுமையாளர்கள் அரச அதிபரை வற்புறுத்தி வருகின்றார்கள்.

இதனால் கைவிடப்பட்ட மத்திய தர வர்க்கத்தினரின் காணி உரிமையாளர்களுக்கு அரச அதிபர் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். காணிக்கு வந்து சேருங்கள் அல்லது மற்றவர்களுக்கு வழங்குவதற்காக அக்காணிகளை விட்டு விடுங்கள் என்பதே அந்தக் கோரிக்கையாகும். காணியைக் கைவிடுபவர்களுக்கு உரிய படிவங்களும் கடித மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. (க - 37)

## தபாலகத்தில் தொலைபேசி இணைப்பு இல்லை

மாங்குளம், பெப். 26

மாங்குளம் தபாலகம் கடந்த ஆறு வருடங்களாகத் தொலைபேசி இணைப்பு இன்றி இயங்கி வருகிறது இத் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்த உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கத்தவறி வருவதால் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்துவதில் தாமதம் காணப்படுகிறது. (க - 94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 1990
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை

1990 ஆம் ஆண்டுக்கு கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்காக வியாபார ஸ்தாபனங்களிடமிருந்து 12 - 03 - 1990 ஆந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக்கட்டணமாக அவற்றிற்கெதிரே குறிப்பிட்டுள்ள தொகையை ''விசேட ஆணையாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை'' என்ற பெயரில் அனுப்பி வைக்க வேண்டும்,

| | பொருட்கள் / சேவைகள் | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| 01. | காகிதாதிகள் | ரூபா 50.00 |
| 02. | தளபாடங்களும் உபகரணங்களும் | ரூபா 50.00 |
| 03. | சீருடைக்கான துணிகள், சப்பாத்துகள் | ரூபா 25.00 |
| 04. | சுகாதார சேவைக்கான பொருட்கள் | ரூபா 50.00 |
| 05. | அச்சுப்படிவங்கள், பதிவேடுகள் | ரூபா 50.00 |
| 06. | மின்சாரப் பொருட்கள் | ரூபா 200.00 |
| 07. | பீ. வீ. சி. கேபிள்ஸ் உம் அலுமினிய மின் கடத்திகளும் | ரூபா 200.00 |
| 08. | மின்சாரத்தூண்கள் | ரூபா 200.00 |
| 09. | வண்டிவாகனத் தகடுகள் | ரூபா 50.00 |

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

வை. இராசையா
விசேட ஆணையாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

வலிகாமம் வடக்கு பிரதேசசபைப் பணிமனை,
காங்கேசன்துறை. 19 - 02 - 1990

[சி-3905]


# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நல்ல நாடகங்களை எதிர்பார்க்கிறது

## தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் உரை

கொழும்பு, பெப். 26

''இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் யாருக்கும் பாரபட்சம் காட்டுவதில்லை. சகல எழுத்தாளர்களிடம் இருந்தும் நாம் நல்ல நாடகங்களை எதிர்பார்க்கிறோம்.

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் இரண்டாவது வானொலி நாடக நூலான ''முதலாம்பிள்ளை''யின் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திரு. வீ. ஏ. ஞானசுந்தரம் இவ்வாறு கூறினார்.

கொழும்பு முஸ்லிம் லீக் வாலிபர் முன்னனி மண்டபத்தில் நடந்த இவ் விழாவில் ஒலி ஒளி நேயர் மன்றத் தலைவர் திரு. தம்பிஐயா தேவதாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். வானொலி இயல் நாடகக் கட்டுப்பாட்டாளர் திரு. எஸ். ஹரிஹரசர்மா ஆசியுரை வழங்கினார்.

இவ் விழாவில் உரை நிகழ்த்திய தினகரன் பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன், இன்று பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத்திலும் நாடகம் ஒரு பாடமாகப் போதிக்கப்படுகிறது. ஆனால் வெளிவரும் நாடக நூல்களோ மிகக் குறைவு. இந்த நிலைமையில் ஆராலியூர் ந. சுந்தரம்பிள்ளை இந்த நூலை வெளியிட்டிருப்பதை நாம் பாரட்ட வேண்டும்' என்று கூறினார்.

வானொலி தமிழ் நாடர் அமைப்பாளர் திரு. ஜோர்ஜ் சந்திரசேகரன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திரு. பி. விக்னேஸ்வரன், வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு. ஆ. சிவநேசச்செல்வன், திரு. தில்லையூர் செல்வராசன், திரு. கே. எஸ். சிவகுமாரன் ஆகியோரும் ஆசிரியரைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள். நூலாசிரியர் பதில் உரை நிகழ்த்தினார்.

இலங்கை சுங்கப்பகுதி உதவிப் பணிப்பாளர் திரு சோ. கனகசபை நூலின் முலாவது பிரதியைப் பெற்றுக்கொண்டார். (சு)

### பெயர் மாற்றம்

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் தேசிய இரசாயன கூட்டுத்தாபனம் எனப் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது.

இத்தகவலை கூட்டுத்தாபன தலைவர்திரு. உபாலித சில்வா தெரிவித்தார்.


## கிறஷர்
### உரிமையாளர்களுக்கு
## ஓர் அரியசந்தர்ப்பம்

வீதி அபிவிருத்தி வேலைகளுக்குப் பலவித பருமன்களில் பெரும் தொகையான உடைத்த கருங்கற்கள் தேவைப்படுகின்றன. முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கற்பாறைகளிலிருந்து இக் கற்கள் பெறவேண்டும். கற்பாறைகளை வெடி வைத்து உடைத்துக் கொடுக்கும் வசதிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொள்ளும் வசதியான இடங்களில் தனியார் தமது கிறஷர் யந்திரங்களை நிறுவி வழங்கப்படும் பெரும் பாறைக் கற்களை கிறஷர் மூலம் நொருக்கி ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு கிறஷர் உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இது பற்றி மேலதிக விபரங்களுக்கு பின்வரும் அலுவலர்களில் ஒருவருடன் தொடர்பு கொள்ளவும்.

1. பிரதம பொறியியலாளர்
   வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
   761, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
2. பிரதம பொறியியலாளர்
   வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
   வவுனியா.
3. பிரதம பொறியியலாளர்
   வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
   முல்லைத்தீவு.

சு. பாலேந்திரா
மாகாணப் பணிப்பாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

[சி 3899]



# சிங்கர்
## விவசாய நீரிறைக்கும் இயந்திரம்
## சேனை, வயல், இரத்தினக் கற் குழிகளுக்கு முற்றிலும் உகந்தது

அதிக செயலாற்றல்
மணிக்கு 8250 கலன் இறைக்க வல்லது
செலவுச் சிக்கனம்
குறைந்தளவு எரிபொருளில் அதிக சேவை.
நீடித்த பாவனை
நவீன சிங்கர் தொழில்நுட்ப உற்பத்தி என்பதால் அதிக காலம் உழைக்கும். பெற்ரோல் அல்லது மண்ணெண்ணெய்யில் இயங்கும் 4 குதிரைச் சக்தி கொண்ட உலகப்புகழ்வாய்ந்த ஹொண்டா ஜீ. கே. என்ஜின் பொருந்தியது.
இரண்டு வடிவ அமைப்புகள் உள்ளன.
- எஸ். பி. 50 (மார்க் 2) விலை. ரூ: 15, 390/-
- என் எஸ். பி. 50 விலை: ரூ. 15,290/-

உதிரிப் பாகங்கள் நாடெங்குமுள்ள சிங்கர் கடைகளில் தாராளமாகக் கிடைக்கும்



விவசாயப் பிரிவு
சிங்கர்*
மாசற்ற மேன்மை

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.

Minds/SA/8


# பாடசாலை மதிய போசனம் சத்துணவாக அமையவேண்டும்

## மாணவர் சுகாதாரக் கூட்டத்தில்உரை

யாழ்ப்பாணம், பெப். 26

'பள்ளிப் பிள்ளைகளுக்கான மதிய போனம் சத்துடையதாக அமைய வேண்டும். சுகாதாரத் திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்கள் பாடசாலைகளுக்குச் சென்று சுகாதார முறைப்படி மதிய உணவு தயாரிக்கப்படுகிறதா என்று பார்வையிட வேண்டும்.

கடந்த 22ஆம் திகதி யாழ் பிராந்திய சுகாதாரப் பணிமனையில் நடைபெற்ற ஜனசவியத் திட்டத்தில் பாடசாலை மாணவர் சுகாதாரம் பற்றிய கூட்டத்தில் உரை நிகழ்த்திய உதவிச் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஈ இராஜநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

டாக்டர் இராஜநாதன் மேலும் பேசுகையில் பாடசாலை மதிய உணவு பரிமாறும் நேரங்களில் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டமும் உண்டு. நாய்களை அழிக்க உள்ளூர் ஆட்சி மன்றங்களுடனும் அரசார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுச்சந்தைகள், பாடசாலைகள், வைத்தியசாலைகளில் காணப்படும் கட்டாக்காலி நாய்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறினார். (சு- 18)

## 400 பேர் மேன்முறையீடு

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் பதவிக்காக விண்ணப்பித்து தெரிவின் போது நிராகரிக்கப்பட்ட 400 விண்ணப்பதாரர்களின் மீளாய்வு மேன்முறையீடுகள்தற்போதுகிளிநொச்சி கல்வி திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளன. (-76)

## சேவைக்கால பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், பெப் 26

பாடசாலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் சுகாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமான சேவைக்காலப் பயிற்சிநெறி இன்று தொடக்கம் எதிர்வரும் 2 ஆம் திகதி வரைக்கும் யாழ் வளாக சமூக மருத்துவ இயல் பிரிவில் நடைபெறும்.

யாழ். மாவட்ட விஞ்ஞான சேவைக்கால உடல்நல ஆசிரியர்கள், பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர்கள் ஆகியோர் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்வார்கள்.

யாழ். வளாகப் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம், யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் செல்வி ரீ. பெரியதம்பி, யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை ஆகியோர் குத்துவிளக்கேற்றி இப்பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துவார்கள்.

யாழ். வளாக சமூக மருத்துவ வியல் தலைவர் டாக்டர் ... நெறியை வழங்கி வைத்தார். (சு-18)


# TV TRAVELS & TOURIST
# உடனடி வேலைவாய்ப்பு

## ★ SAUDI Operation & Maintenance Co. Ltd.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | CIVIL ENGINEER | 1600 | — | 1900 |
| 1 | MECHANICAL ENGINEER | 2000 | | |
| 1 | TELEPHONE TECHNICIAN | 9000 | — | 1000 |
| 2 | GENERAL ELECTRICIAN | 650 | — | 700 |
| 1 | ELECTRONICS TECHNICIAN | 900 | — | 1000 |
| 2 | AUTO ELECTRICAL TECHNICIAN | 800 | — | 900 |
| 2 | PUMP MECHANIC | 700 | — | 900 |
| 1 | ELECTRICAL TECHNICIAN | 600 | — | 700 |
| 1 | LAUNDRY SECTION HEAD | 700 | — | 750 |
| 1 | GENERAL ELECTRICIAN | 600 | — | 700 |
| 3 | PLUMBER | 600 | -- | 700 |
| 19 | FEMALE PORTERS | 300 | | |
| 21 | PORTERS | 300 | | |
| 2 | PAINTER | 500 | — | 600 |
| 2 | AUTO WORK SHOP LABOURERS | 300 | | |
| 1 | TAILOR | 600 | — | 700 |
| 6 | WASHER | 300 | | |
| 3 | LAUNDRY PRESS LABOURERS | 600 | — | 700 |
| 5 | LAUNDRY LABOURERS | 300 | | |
| 5 | LABOURER CIVIL SECTION | 300 | | |

வயது எல்லை 21 — 47

நேர்முகப் பரீட்சை: 06 - 03 - 1990

## ★ KUWAIT

30 RESTAURANT WAITER உடன் தேவை. உணவு. தங்குமிடம் இலவசம்.

வயது எல்லை 18 — 40

சம்பளம்: 30 K.D

| | | |
|---|---|---|
| 40 | DRIVERS | — 55 K.D |
| 60 | HEAVY VECHICLE DRIVERS | — 70 K.D |
| 5 | MECHANICS | — 90 K.D |
| 3 | TYREMAN | — 0 K.D |
| 1 | SECRETARY (Female) | — 145 K.D |

ஆண்கள் வயது: 20 — 47 பெண்: 25 — 35

கடவுச்சீட்டு, 3 பாஸ்போர்ட் சைஸ் படம், அனுபவச்சான்றிதழ் என்பவற்றுடன் உடன் எமது காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

Front of Railway Station
Brown Road, Kokuvil.


### அறிவித்தல்

எம்மிடம் சவூதி, குவைற்நாட்டிற்கு செல்வதற்கு கடவுச்சீட்டு தந்தவர்கள் அனைவருக்கும் 07-03-1990இல் பயணம் உள்ளதால் உடன் எமது காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

(சி30/97)


## ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி நடராஜா



அமரர் நடராஜா சிவகாமிப்பிள்ளை

எம் இதயத்தில் நிறைந்துள்ள உங்கள் பசுமையான நினைவுகளோடு ஆண்டுகள் ஆறு நிறைகின்ற இவ்வேளையில் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்கின்றோம்.

392/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப்படை இழைத்த கொடுமைகளை நேரடியாக சென்று பார்த்து வருகிறேன்

## ஈழவிஜயம் குறித்து பருத்தித்துறையில் நெடுமாறன்

பருத்தித்துறை, பெப். 26

''இந்திய அமைதி காக்கும் படை தமிழீழ மக்களுக்கு இழைத்த கொடுமைகளைக் கிராமம் கிராமமாகச் சென்று பார்வையிட்டு வருறேன்''

காந்தி காமராஜர் கட்சிப் பிரமுகர் திரு. பா. நெடுமாறன் சனிக்கிழமை மாலை மருதடி வைரவர் கோவில் முன்றலில் நடந்த கூட்டத்தில் இப்படிக் கூறினார்.

கூட்டம் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சதா. காந்திதாசன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் திரு. பா.நெடுமாறன் மேலும்கூறியதாவது.

''தமிழீழ மக்களுக்கு ஸ்ரீலங்கா சிங்கள இராணுவம் இழைத்து வரும் கொடுமைகளைப் போக்குவதற்காக பிரதர் ராஜீவ் காந்தியால் இந்திய அமைதிப்படை அனுப்பப்பட்டது.

ஆனால் இங்கு வந்த அமைதிப்படையினர் இதற்கு மாறாக நடந்து கொண்டனர்.

சமாதான நோக்கத்துக்காக வருகை தந்தவர்களால் இத்தமிழீழ மண்ணில் இரத்த ஆறு ஓடியதே மிச்சம். தமிழர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க என்று வந்த இந்திய இராணுவம் தமிழர்களின் போராட்டத்தை ஒடுக்க நடவடிக்கை எடுத்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய உறுதி மிக்க போராட்டத்தினால் இந்திய இராணுவம் இரண்டு ஆண்டுகளில் வெளியேற வேண்டி வந்தது.

இந்திய இராணுவம் ஈழத்துக்கு வந்த போது ஒரு சில மணி நேரத்துக்குள், ஒரு சில நாட்களுக்குள் தமிழ் மக்களின் போராட்டத்தை ஒடுக்கி விடும் என இந்திய வல்லரசு எதிர்பார்த்தது. ஆனால் அது கைகூடவில்லை 35 லட்சம் தமிழீழ மக்கள் காட்டிய ஒத்துழைப்பு உலகத் தமிழ் மக்களான 8 கோடியினருக்குப் பெருமையைத் தேடித் தந்துள்ளது. உலகின் பல பாகங்களில் போராட்ட முனைப்புகள் ஏற்பட்டாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட யுக்திகள் போற்றப்பட வேண்டியவை. ஒழுக்கம் கட்டுப்பாடு என்பன மூலமே இவ்வமைப்பு இறுக்கமாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

### பொன் எழுத்தால் பொறிக்கப்படும் வரலாறு

வீரம் செறிந்த இவ்விடுதலை வேங்கைகளை உருவாக்கிய இப்பூமியின் பெற்றோர்களைப் பெரிதும் மதிக்கின்றேன். உலக மக்களைப் பெரிதும் கவர்ந்த இப்போராட்டத்தினால் இவ்வரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

''இந்த வெற்றியுடன் எல்லாம் முடிந்து விட்டது எனத் தமிழீழ மக்கள் எண்ணக்கூடாது. இம்மண்ணில் சுதந்திரம் வேண்டும். மக்கள் சுதந்திரமாக நடைபோட வேண்டும். சுதந்திரக் கொடி பறக்க வேண்டும். அதுவரை போராட்டம் தொடரும்.

உலகத் தமிழ் மக்களுக்கு ஒரு தனி நாடு வேண்டும். அந்த நாட்டைப் பெற்றுத் தரக்கூடிய வீரம் செறிந்த அறிவு ஆற்றல் படைத்த ஒரேயொரு வீரன் பிரபாகரன் தான்.

உலகம் போற்றும் உறுதிமிக்க தலைவர் பிரபாகரன். ஈழத் தமிழ் மக்களுக்கு மட்டும் அவர் தலைவரல்ல. உலகில் வாழும் எட்டுக் கோடித் தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் தலைவர் அவர். உலகத் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் அவர். வீரமும் தியாகமும் மிக்கவர்.

ஈழத் தமிழ் மக்களின் வெற்றிக்கு நாம் என்றும் உறுதுணையாக இருப்போம். இம்மண்ணில் சுதந்திரக் கொடி ஏற்றுவதை நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

இவ்வாறு பா. நெடுமாறன் தெரிவித்தார்.

அடுத்து திராவிட கழகத்தைச் சேர்ந்த திரு. இராமகிருஷ்ணன் பேசுகையில்

இன்று தமிழீழ மக்களின் போராட்டத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உலக நாடுகள் விரைவில் ஐக்கிய நாடுகள் சபையில் தமிழீழத்தை அங்கீகரிக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. தமிழீழம் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்யப்படும்வரை போராட்டம் நடைபெறும் என்றார். (இ-118)

## வங்கிக் கிளைகள்

காங்கேசன்துறை பெப் 26

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வளவில் இயங்கிய இரண்டு இலங்கை வங்கிக்கிளைகளையும் மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வன்செயல்கள் காரணமாக இக்கிளைகள் 31- 5- 84 இல் மூடப்பட்டன.

வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து இக் கிளைகள் இயங்க ஆரம்பிக்கலாமென எதிர்பார்க்கப் படுகின்றது. (க-68)

## இறுதிக்கட்ட...

படையினருக்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு அளிப்பார்களா?

பதில்: அமைதிப்படை சென்றபின்னர் இலங்கைப் பொலீஸார் தங்கள் வழமையான கடமைகளை மேற்கொள்ள முடியும். பொலீஸாரின் அலுவல்களில் நாம் தலையிட மாட்டோம். அமைதி தற்சமயம் நிலவுவதால் ஆயுதப்படையினர் தேவையில்லை.

கேள்வி: எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் பொலீஸார் மற்றும் ஆயுதப் படையினருக்கும் இடையே மோதல்கள் ஏற்படுமா?

பதில்: பொலீஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். ஆயுதப்படையினர் விஷயத்தில் தலையிடமாட்டோம். எப்படியாயினும் அமைதிக்குப்பங்கம்ஏற்பட்டால் நாம் தலையிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவோம். ஆனால் அப்படியான மோதல்கள் வரும் என நான் எதிர்பார்க்கவில்லை. (உ- எ)

# முஸ்லிம்களின் நிலை பற்றி வெளிநாடுகளில் பிரசாரம்

## காங்கிரஸ் தூதுக்குழு திரும்பியது

கொழும்பு, பெப் 26

இலங்கையில் முஸ்லிம் மக்கள் அடைந்து வரும் துன்பங்கள் குறித்து இலங்கை அரசுடன் பேசுவதாக பல முஸ்லிம் நாடுகள் உறுதியளித்துள்ளன.

இத்தகவலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் வெளியிட்டார்.

பல முஸ்லிம் நாடுகளுக்கு விஜயம் செய்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு நாடு திரும்பி விட்டது. இக் குழுவிற்கு முஸ்லிம் காங்கிரஸ் துணைத்தலைவர் அப்துல் ரசூல் தலைமை வகித்தார்.

முஸ்லிம் நாடுகளில் முக்கிய பிரமுகர்களை இக் குழு சந்தித்து பேச்சுக்கள் நடத்தியது. அது சம்பந்தமான விவரங்களை வெளியிட விரும்பவில்லை.

-இப்படி ஜனாப் அஷ்ரப் சொன்னார். (ஒ-எ)

# விடுதலைப் புலிகள் இயக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை நாம் மேற்கொண்ட சமயம் ஒப்பந்தத்தை இந்தியா திணிக்கிறது என்ற மாதிரி இலங்கை நடந்து கொள்கிறது. இம்மாதிரியான விஷயங்களை நாம் விரும்பவில்லை'' — என்றும் குஜ்ரால் என்னிடம் சொன்னார்.

இலங்கைக்கு உதவ இந்தியா விரும்புகிறது. அதுபோல இலங்கையும் எம்மையும் புரிந்துகொண்டு எமக்கு உதவ வேண்டும் என்று குஜ்ரால் சொன்னார்.

வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி திரு. குஜ்ரால் கேட்டதற்கு நான், ''அம்மாகாணம் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருக்கிறது''-என்று சொன்னேன்.

தமிழர்களுக்காக அவர்கள் தான் போராடினார்கள் என்றும், ஆகவே மக்களை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்றும் நான் அமைச்சர் குஜ்ராலிடம் சொன்னேன்.

நான் சொன்னது அமைச்சரைத் திருப்தியடையச்செய்ததாகத் தெரிந்தது.

கேள்வி: வடக்கு - கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க இலங்கை அரசு அனுமதித்தது சரியான செயல் என்று கருதுகிறீர்களா? ஜனநாயக நடைமுறையில் ஈ. பி. ஆர். எல். எவ்வும் ஏனையோரும் தானே சேர்ந்தார்கள்?

அமைச்சர் தொண்டமான்: தற்போதைய நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மட்டுமே இலங்கை அரசு நம்ப முடியும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே இலங்கை அரசுடன் சேர்ந்து பணியாற்றமுன் வந்துள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ். உட்பட ஏனைய குழுக்கள் தங்களுக்கு உதவ வேண்டும் என்று இந்தியாவையே எதிர்பார்க்கின்றன. இவர்கள் ஜனநாயக நடைமுறைக்கு வந்துவிட்டனர் என்பது உண்மையே. ஆனால் இவர்கள் தங்கள் அலுவல்களைக் கவனிக்க இலங்கையை [illegible] இல்லையே. இந்தியாவை [illegible] தானே இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்!

விடுதலைப்புலிகளின் நிலை இதுவல்ல.

இச் சூழ்நிலையில் தங்களை நாடி வரும் குழுவுக்கு ஆதரவளிப்பதைத் தவிர இலங்கை அரசுக்கு மாற்றுவழி இல்லை.

கேள்வி: விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசு தற்போது கடைப்பிடிக்கும் கொள்கை ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தை தூரத்தில் வைப்பதுடன் அவர்களைத் தீவிரவாதத்துக்கு இட்டுச் செல்ல வைக்காதா?

அமைச்சர் தொண்டமான்: எதுவும் நடக்கமுடியும். அங்கு விடுதலைப் புலிகள் இருக்கும் போது; ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினர் ஆயுதம் தூக்குவது பலனளிக்குமா? என்பதை காலம் தான் காட்டவேண்டும். அவர்கள் பலம் எப்படியிருக்கும் என்பது கேள்விக்குறியே.

வடக்கு - கிழக்கு மாகாண சபையை விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இறுதியில் கொண்டுவந்துவிடுவர்.

ஏனைய குழுக்கள் வெளியில் விடப்படுவர் அல்லது விடுதலைப் புலிகளுக்குக்கீழே இருப்பர்.

திரு. வரதராஜப்பெருமாளின் பயமுறுத்தல் அவ்வளவு பாரதூரமானதல்ல என்று நான் நம்புகின்றேன்.

கேள்வி: தமிழர் போராளி அமைப்புக்கள் தோட்டங்களுக்குள் ஊடுருவல் நடத்துகின்றன என்று மீண்டும் சொல்லப்படுகிறது. இப் பயமுறுத்தல் பாரதூரமானதாக உள்ளதா? இ தொ. கவை எந்தளவுக்கு இது பாதிக்கும்?

அமைச்சர் தொண்டமான்: பல ஆண்டுகளாக இக் கதை இருந்து வருகிறது. சில விஷயங்களை அவர்கள் பெரிதுபடுத்திச் சொல்கின்றனர். அவர்கள் ஒரு பயமுறுத்தல் அல்ல. விடுதலைப்புலிகளைத் தவிர ஏனைய குழுக்கள் எல்லாம் மலையகத்தில் இயங்குவதாகக்கூறிக்கொள்கின்றன. இ தொ. கவை இது பாதிக்காது [illegible]

வடமராட்சி

# தனியார் கல்வி நிறுவனங்கள் சீரான கட்டணம் அறவிட தீர்மானம்

பருத்தித்துறை, பெப். 26

வடமராட்சியிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் ஒரு சீரான கட்டணம் அறவிடுவது தொடர்பாக வடமராட்சி தனியார் கல்வி நிலைய ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. மார்ச் மாதம் முதல் இது அமுலுக்கு வரும்.

வடமராட்சி தனியார் கல்வி நிலைய ஒன்றியக் கூட்டம் கடந்த 23 ஆம் திகதி திரு. பி. வியாகேஸ் தலைமையில் நெல்லியடி மொடேன் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடமராட்சியிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் ஒரு சீரான கட்டணம் அறவிட வேண்டுமென கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டது.

இக்கோரிக்கையை ஆராய்ந்த வடமராட்சி தனியார் கல்வி நிலைய ஒன்றியம் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் ஜீ. சீ. ஈ. உயர்தர விஞ்ஞான வகுப்புகளுக்கு ரூபா நூறு, ஜீ. சீ. ஈ. உயர்தர கலை வர்த்தக வகுப்புக்களுக்கு ரூபா எண்பது, ஆண்டு 11 வகுப்புக்கு ரூபா எழுபது, ஆண்டு 10க்கு ரூபா அறுபத்தைந்து, ஆண்டு 9க்கு ரூபா ஐம்பத்தைந்து, ஆண்டு 8க்கு ரூபா ஐம்பது, ஆண்டு 7க்கு ரூபா நாற்பது, ஆண்டு 6க்கு ரூபா முப்பத்தைந்து, ஆண்டு 5க்கு ரூபா முப்பது, ஆண்டு 4க்கு ரூபா இருபத்தைந்து அறவிடலாம் என ஏகமனதாகத் தீர்மானித்தது.

வடமராட்சியிலுள்ள சகல தனியார் கல்வி நிறுவனங்களும், வீடுகளில் தனிப்பட்ட வகுப்புக்கள் நடத்தும் ஆசிரியர்கள் யாவரும் தவறாது உடனடியாக ஒன்றியத்தில் சேர்ந்துகொள்ள வேண்டும் என்றும் அங்கத்துவப் பணமாக ரூபா ஐம்பது செலுத்த வேண்டுமெனவும், மாதா மாதம் அங்கத்துவப் பணமாக ரூபா இருபத்தைந்து செலுத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட வீடுகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் இரவு 8 மணிவரை பத்துக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கல்வி போதிக்க அனுமதி கோரியுள்ளனர்.

ஆனால் இதுபற்றி அடுத்த வாரம் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு முடிவு தெரிவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தனியார் கல்வி நிலையங்களில் ஒரு வகுப்பில் அறுபதுக்கு மேற்பட்ட மாணவர்களை அனுமதிக்கக் கூடாது எனவும் ஒன்றியத்தினர் கேட்டுக்கொண்டனர்.

மேலும் தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவனின் பிரச்சினைகளில் எந்தவொரு இயக்கமும் நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கூடாது எனவும் மாணவனின் பிரச்சினை தொடர்பாக நிர்வாகியுடன் பெற்றோர்தொடர்புகொண்டுபின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றுவதா அல்லது இல்லையா என்பது குறித்து இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை முடிவு செய்யவில்லை என்றும் அறிய வந்தது.

இந்த மாநாடு தொடர்பாக தங்களுக்கு அழைப்பு ஏதும் வரவில்லை என்று ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

# ஈழம் ஒன்றே . . . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் ஆயுதங்களில் இருந்து சட்ட பூர்வமாக வைத்திருக்கும் ஆயுதங்கள் எவை என்பதை பிரித்துப் பார்ப்பது மிகவும் சஷ்டமான காரியம்,

தாங்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் சட்டபூர்வமானவை என்றே ஒவ்வொரு குழுவும் வற்புறுத்தும். இச் சூழ்நிலையில் ஆயுதங்களைக் கீழே போடுவதோ அல்லது அவற்றைச் சரணடைவதோ யதார்த்த பூர்வமானதாக இருக்க முடியாது.

மூன்றாவது, மாகாணசபை தேர்தலில் பங்குபற்றாத இயக்கங்களும் போராளிக் குழுக்களும் இப்போது அரசியல் அமைப்புக்களாக மாறிவிட்டன, அவைகளில் சில ஈரோஸ், தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கம், ஈழமக்கள் ஜனநாயகக் (ஈ. பி. டி. பி), ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈ. டி. எப்)

இந்த அமைப்புக்களின் அரசியல் தனித்தன்மை அங்கீகரிக்கப்படவேண்டும்.

ஜனநாயக தேர்தல் நடைமுறையில் அவர்கள் சேர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

கேள்வி: இந்தியா வெளியேறவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளும் கோருகின்றனர். இலங்கை அரசும் கோருகிறது. ஆகவே இலங்கையில் மேலும் என்ன அலுவல் இந்தியாவுக்கு இருக்கிறது?

பாலகுமாரன்: அமைதிப் படை வாபஸாக வேண்டும். அது திடீரென்று இடம் பெறக் கூடாது. அமைதிப் படை தனது நடவடிக்கைகளைக் குறித்து குறிப்பிட்ட கால வரையறைக்குள் கட்டம் கட்டமாக வாபஸ் வாங்கப்படவேண்டும்.

இதன் கருத்து இந்தியா பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளக்கூடாது என்பதல்ல.

கேள்வி: அமைதிப்படை வாபஸான பின்னர் அமைதி பராமரிக்கப்படுவதை மேற்பார்வையிடுவது யார்?

பாலகுமாரன்: இலங்கை இராணுவத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. இலங்கைப் பொலீஸார் மக்கள் தொண்டர் படையுடன் சேர்ந்து பொலிஸ் பணியில் ஈடுபடுவதற்கு போராளிக் குழுக்களோ அல்லது மக்களோ ஆட்சேபனை தெரிவிக்கமாட்டார்கள்.

கேள்வி: இந்தியாவில் அரசாங்கம் மாறிய பின்னர் அதன் நோக்கத்தில் மாற்றம் தென்படுவதாக நீங்கள் எண்ணுகிறீர்களா?

பாலகுமாரன்: நடவடிக்கைகளை அதே அதிகாரிகள் [illegible] இன்னமும் கையாளுகிறார்கள். பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்று புதிய அரசு எடுத்த நடவடிக்கை வரவேற்கப்பட வேண்டியதொன்று. சிந்தனையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அது காட்டுகிறது.

செயற்திட்டம் ஒன்றை உருவாக்குவதில், தரை நிலைமையைச் சரியாக விளங்கிக் கொண்டவர்களும் இலங்கையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு நிதர்சன சாட்சிகளாக இருப்பவர்களும் சம்பந்தப்படவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

புதுடில்லியிலோ அல்லது வேறு எங்கேயாவது இருக்கும் சிலர், கலாநிதிப் பட்டம் பெறுவதற்கு ஆய்வுக் கட்டுரை தயாரிப்பது போன்று உருவாக்கும் செயற்திட்டம் மீண்டும் தோல்வி காணும்.

கேள்வி: அமைதி உடன்பாட்டுக்கு மாற்று என்ன?

பாலகுமாரன்: இத்திகதி வரை ஒன்றுமே இல்லை. ஒப்பந்தம் வந்த பின்னர் கடந்த 2½ ஆண்டுகளில் எவ்வளவோ நடந்துவிட்டன. இக்காலத்தில் செய்யப்பட்ட துன்பங்களைக் களைய முதலில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அமைதியைப் பாதுகாக்க இலங்கை - இந்திய அரசுகள், தமிழக அரசு, போராளிக் குழுக்கள் சேர்ந்து ஒரு இணக்கமான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கேள்வி: 1987 உடன்பாடு ஏன் தோல்வி கண்டது?

பாலகுமாரன்: யுத்தத்தில் ஈடுபடும் சகல அமைப்புக்களும் சேர்ந்து உருவாக்குவது தான் உடன்பாடு.

ஆனால் 1987 இல் ஏற்பட்ட உடன்பாட்டை உருவாக்குவதில் ஒரு கட்சி சம்பந்தப்படவில்லை. அதுதான் மிகப்பெரிய குறை.

கேள்வி: எந்தக் கட்சி?

பாலகுமாரன்: தமிழர் குழுக்கள்.

கேள்வி: அந்த நேரம் போராளிக் குழுக்களும் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர் என்ற எண்ணமே நிலவியது?

பாலகுமாரன்: இல்லை. உண்மையில் கைச்சாத்திடுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் நகல் உடன்பாடு எம்மிடம் காட்டப்பட்டது.

ஜூலை 27இல் ஒப்பந்தம் காட்டப்பட்டது. அது பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க 15 நிமிடங்களே எமக்குத் தரப்பட்டன. உடன்பாட்டை ஏற்கும்படி மற்றத் தரப்பான இலங்கை அரசும் பயமுறுத்தப்பட்டது. அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஜெயவர்த்தனா தான் அதற்கு சதி செய்ய முயற்சித்தார்.

[illegible] பாசண அரசுக்குத் தலைமை வகிக்கும் ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் கூட உடன்படிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கவில்லையா?

பாலகுமாரன்: ஆம், ஈ. பி. ஆர். எல். எப். கூட, இன்று கூட அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஏனென்றால் அவர்கள் வாழ்வே அதிலேதான் தங்கியிருந்தது.

விடுதலைப்புலிகள் உடன்பாட்டை உடனே எதிர்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தி அழித்து விட இதை அருமையான சந்தர்ப்பம் என்று இந்தியா பார்த்தது. அதன் பின்னர் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அது வெட்கக்கேடானது.

போராளி அமைப்புக்களுக்கு இருக்கும் நல்ல அபிப்பிராயத்துக்கு மாசு கற்பிக்கும் வகையில் உடன்பாட்டை அமுல் நடத்துவது திட்டமிட்ட முறையில் சதி செய்து குழப்பப்பட்டது.

கேள்வி: நீண்ட கால நோக்கை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்படக் கூடிய இலட்சிய செயற்திட்டம் ஒன்று பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பாலகுமாரன்: எந்தசெயற்திட்டமும் இடைக்கால ஏற்பாடாக குறுகியகால நோக்குடன் தான் இருக்கும் இறுதியானசெயற்திட்டம் 'ஈழம்' ஆகவே இருக்கும்.

எதிர்காலத்தில் இது யதார்த்தபூர்வமாகிவிடும் என்பதை நீங்கள் பார்க்கலாம். எவ்வளவு காலத்தினுள் என்பது தான் கேள்வி.

இன்று ''உடன்பாடு'' கைவிடப்பட்டு விட்டது,

நாம் எங்கு ஆரம்பித்தோமோ அங்கே நிற்கிறோம், ஆனால் முன்னரிலும் பார்க்க நாம் சிறிது முதிர்ச்சி அடைந்துள்ளோம்.

கேள்வி: இந்திய அரசு சொன்னபடி ஈ. பி. ஆர். எல் எவ் போன்ற குழுக்கள் நடந்து கொண்டன. அவர்கள் பற்றி மக்கள் எப்படி மதிப்பிடுகிறார்கள்?

பாலகுமார்: அவர்கள் பெயர் சேறாகிவிட்டது. சுதந்திரமான, நீதியான தேர்தல்கள் நடத்தப்பட்டால் அவர்கள் வெளியேற்றப்படுவர்.

கேள்வி: உங்களுடைய ஈரோஸின் நிலை என்ன?

பாலகுமாரன்; நாமும் சில இணக்கங்களைக் கண்டோம்; ஆனால் இந்திய அரசாங்கத்தின் எடுபிடிகளாக நாம் மாறவில்லை. மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவு ஆதரவு எமக்கு இன்னும் உண்டு.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி விமலாதேவி மகேஸ்வரன்

மலர்வு: 25- 07- 1951

உதிர்வு: 09- 03- 1989

உணர்வுகள் இறப்பதில்லை
என் உணர்வில் என்றும் நீ

செ. மகேஸ்வரன் (மனோ)

18, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம்.

(11876)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# உதயன்

26 - 02 - 1990 திங்கட்கிழமை




கடத்தப்பட்ட அல்லது காணாமற்போன

## வாகனங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன !

யாழ்ப்பாணம், பெப் 26
கடந்தகாலங்களில்பறிக்கப்பட்ட, மற்றும் காணாமல்போன வாகனங்களை உரியவர்களிடம் ஒப்படைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. யாழ் செயலகமும், பொலீஸ் திணைக்களமும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

கடந்த காலங்களில் பொது மக்களிடமிருந்தும் அரச திணைக்களங்களிலிருந்தும் இயக்கங்களாலும், படையினராலும் பல வாகனங்கள் கடத்தப்பட்டன அல்லது பறிக்கப்பட்டன.

அதேநேரம் அரசதிணைக்களங்கள் பாதுகாப்புக்கருதி யாழ் கோட்டைப்பகுதியில் சில வாகனங்களை நிறுத்தியிருந்தன.

இந்த வாகனங்களில்அனேகமானவை கோட்டையிலும், பலாலியிலும் பழுதடைந்த நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## விடுதலையான இளைஞன் 4 நாட்களின் பின் மரணம்!

தாளையடி, பெப் 26
இந்திய இராணுவ தடுப்புக் காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் வீடு திரும்பி நான்குநாட்களின் பின்னர் மரணமானார்.

வடமராட்சி கிழக்கிலுள்ள வத்திராயன் வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை கோபாலகிருஷ்ணன் (கணேசன்)என்ற 21 வயது இளைஞனே இறந்தவர் ஆவார்.

கடந்த இரண்டு வருடங்களாக இவர் பலாலி இந்திய இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையாகி இருந்தார்.

கடந்தவியாழனன்று வீட்டிலிருந்து பளைக்குச் செல்லும் வழியில் மயக்கமுற்று வீழ்ந்து இவர் மரணமானார். (இ-144)

## அனைத்து தமிழ் குழுக்களுடன் அரசு மீண்டும் பேச்சு

கொழும்பு, பெப் 26
வடக்கு கிழக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு தொடர்பான பேச்சுக்களை அனைத்துத் தமிழர் அமைப்புக்களுடன் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

அரசின் சார்பில் உயர் கல்வி தொழில் நுட்பத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீது தமிழர் குழுக்களை தனித்தனியாக அழைத்துப்பேச்சுக்கள் நடத்துவார்.

நாளை மறுநாள் (புதன் கிழமை) புளொட் இயக்கத்தினருடன் அமைச்சர் பேச்சுக்களை நடத்தவிருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் இதர அமைப்புக்களையும் அழைத்துத் தனித்தனியாக பேச்சுக்கள் நடத்துவார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து இந்திய அமைதிப் படை வெளியேறிய பின்னர்சட்டம் ஒழுங்கு பராமரிப்புக்கு மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குகள் பற்றி இப்பேச்சுக்களின் போது விரிவாக ஆராயப்படும் என்று தெரிகிறது.

வடக்கு கிழக்கு சமாதானக் குழுவின் கூட்டத்தைக் கூட்டுவது தொடர்பாகவும் தமிழர் குழுக்களின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளவும் அமைச்சர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வார் என்று தெரிய வருகிறது. (ஒ எ)

3வருடம் நிறுத்தப்பட்டிருந்த

## வெளிவாரிப் பரீட்சைகள் மீண்டும் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், பெப் 26
மூன்று வருடங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பரீட்சைகள் மீண்டும் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற இருக்கின்றன.

கடந்த மூன்று வருடங்களாக இப்பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறமுடியாத சூழ்நிலை நிலவிவந்தது.

மீண்டும் இவ்வருடம் இப்பரீட்சையை ஏப்ரல் இரண்டாம் திகதி முதல் முப்பதாம் திகதிவரை நடத்த ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன. சுமார் 600 பேர் இப்பரீட்சைக்கு தோற்றவிருக்கிறார்கள். (இ-3)

## கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பு வீதம் குறைகிறது

### சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 26
யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு விகிதம் குறைந்து வருகிறது.

இவ்வாறு வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். கனகசபை தெரிவித்தார்.

இலங்கைக் குடும்பத்திட்டச் சங்கத்தின் விசேட கூட்டம் நேற்றுக்காலை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. அதில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்

குடும்பத்திட்டச் சங்க யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. கனகசபை மேலும் கூறியதாவது;

போஷாக்குஇன்மை காரணமாக 1988ஆம் ஆண்டு 44 கர்ப்பிணித் தாய்மார்கள் இறந்துள்ளார்கள். அதே சமயம் 89ஆம் ஆண்டு 24பேரே இறந்துள்ளனர். இவ்வருடம் இறப்பு விகிதம் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் பயிற்சி பெறாதவர்களால் மேற்கொள்ளப்படும் கருச்சிதைவு சிகிச்சைகளாலும் மரணங்கள் ஏற்படுகின்றன. இது துரதிஷ்டவசமானதாகும் — என்று அவர் கூறினார். (ஒ-3)

அமைதிப்படை விலகிய பின்

## திருகோணமலையைவிட்டு வெளியேறுவோம் ஆனால் நிச்சயமாக இலங்கையைவிட்டு அல்ல

### யோகசங்கரி கூறுகிறார்

கொழும்பு, பெப் 26
அமைதிப்படை விலகிய பின்னர் நாம் திருகோணமலையை விட்டு வெளியேறுவோம். நிச்சயமாக இலங்கையை விட்டுப் போகமாட்டோம்.

ஈ. பி. ஆர். எல். எப். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கணேசசங்கரி யோகசங்கரி முண்கண்டவாறு தெரிவித்தார் என்று சண்டே ஐலண்ட் செய்தி வெளியிட்டது.

நாம் இங்கு இருந்து கொடுண் எமது உரிமைகளுக்கான போராட்டத்தை அ' சியல் ரீதியாக நடத்துவோம்ர -என்றும் திரு. யோகசங்கரி சொன்னார்.

அமைதிப்படை வெளியேறத்தான் போகிறது. எமக்குக் கிடைத்த தகவலின்படி அமைதிப்படை திருகோணமலையில்இருந்து மார்ச்15ஆம் திகதி வெளியேறிவிட திட்டமிடப்பட்டுள்ளது.

அமைதிப்படை விலகலில் தாமதம் என்ற கேள்விக்கே இடமில்லை. மார்ச் 31 அளவில் அனைவரும் போய்விடுவார்கள்.

திருமலையில் இருந்து அமைதிப்படையினர் விலகிய பின்னர் ஈ. பி. ஆர். எல். எப். மற்றும் ஈ. என். டி. எல். எப். இயக்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்தியா திரும்புவதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

நாம் இலங்கையில் இருந்து ஓடிவிடமாட்டோம். நாம் கொழும்புக்கு செல்வோம் அல்லது வடக்கு- கிழக்குக்கு வெளியே உள்ள இடங்களில் இருந்து கொண்டு எமது உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் போராடுவோம்.

மாகாணசபை தொடர்ந்து 3 மாதங்கள் இயங்காவிட்டால் மாகாணசபை தானாகவே செல்லுபடியற்றதாகிவிடும்.

நாம் அரசமைப்புச் சட்டத்தை மீறமாட்டோம். சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாணசபையின் செயற்பாடுகள் முட்டுக்கட்டைகள் மற்றும் தடங்கல்களின்றி நடத்தப்பட உறுதி செய்வது இலங்கை அரசின் பொறுப்பாகும் – என்றார். (ஒ-எ)

## குழந்தைகளுக்கு நஞ்சூட்டி பின் தாயும் தற்கொலை

### பலாலியில் பரிதாபம்

யாழ்ம்பாணம், பெப். 26
வாழ்க்கையில் விரக்தியடைந்த இளம் தாய் ஒருவர் தன் இரு பாலகர்களுக்கும் நஞ்சு ஊட்டி தானும் நஞ்சருந்தினார். இதில் அந்தத் தாயும் 3 வயதுப் பாலகனும் பலியானார்கள். 5 வயதுப் பாலகன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றான்.

பலாலியில் நேற்று முன்தினம் இரவு நடந்த இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

பலாலியைச்சேர்ந்த இரத்தினம்புவனேஸ்வரி (26வயது) என்னும் இளம் குடும்பப் பெண் இரவுபடுக்கைக்கு போகும்போது எலிப்பாசானத்தை சாப்பாட்டுடன் சேர்த்து பிள்ளைகளுக்கும் கொடுத்து தானும் சாப்பிட்டாள்.

இரவு மூன்று வயதுப் பாலகன் வாந்தி எடுத்து இறந்ததை அடுத்து தாயும் 5 வயது பாலகனும் யாழ். வைத்திய சாலைக்குக் கொண்டுவரப்பட்டனர். அங்குதாயும் மரணமானார். பாலகன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறான்.

இந்தப் பெண்ணின் கணவன் அண்மையில் இயக்கம் ஒன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று சொல்லப்பட்டது. (ஒ-3)

## மோசடி பாஸ்போர்ட்டுகளுடன் ஒரே நாளில் 16பேர் கைது!

### கட்டுநாயக்காவில் சம்பவம்

கொழும்பு, பெப். 26
மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படும் பாஸ்போர்ட்டுக்களைப் பயன்படுத்திவெளிநாடு செல்லமுயன்ற 16 பேர் கடந்த வெள்ளிக்கிழமை கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் வைத்து குடியேற்ற, குடிவரவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் எழுவர் பெண்கள் ஆவர். மூன்று இனங்களைச் சேர்ந்தவர்களும் இவர்களில் அடங்குவர்.

பெண்கள் சவூதிஅரேபியாவுக்குச்செல்ல இருந்தார்கள். ஆண்கள் அனைவரும் அம்ஸ்டர்டாம் செல்ல இருந்தனர்.

சந்தேக நபர்கள் அனைவரும் மேல் விசாரணைக்காக கட்டுநாயக்கா பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஒ-எ(

இராமநாதபுரம் தாக்குதல்:

## கடும் நடவடிக்கை எடுக்க திராவிடர் கழகம் கோரல்

இராமநாதபுரம் பகுதியில் ஈழத் தமிழ்க் குழு நடத்திய தாகச்சந்தேகிக்கப்படும் தாக்குதலுக்குஉடந்தையாக இருந்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி திராவிடர் கழகம் தமிழக அரசைக் கோரியுள்ளது.

செவ்வாயன்று சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் திரு. கி. வீரமணி இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

ஈழப்பிரச்சினை தொடர்பாக நடத்தப்பட்டு வரும் பேச்சுக்களை முறியடிக்க நடத்தப்பட்ட திட்டமிட்ட சதி என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியிருப்பதைச் சுட்டிக் காட்டிய திரு. வீரமணி, எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம் பெறாதிருக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். (இ - எ)

## காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு பிரான்ஸ் ஆதரவு!

இஸ்லாமாபாத், பெப் 24
ஜம்மு-காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாக பிரெஞ்சு அறிவித்துள்ளது.

இஸ்லாமாபாத்திற்கு விஜயம் செய்த பிரெஞ்சு ஜனாதிபதி திரு. மித்திராண்ட் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்-

பாகிஸ்தான் பிரதமர் [illegible] கலந்து கொண்டார்.

## 'டைனமைட்' வெடி போட்டு மீன்பிடிக்கத் தடை!

### குருநகர் மீனவருக்கு எச்சரிக்கை

குருநகர், பெப். 26
'டைனமைட்' வெடி போட்டு மீன் பிடிப்பதற்கு விடுதலைப் புலிகள் தடைவிதித்துள்ளனர்.

குருநகரில் நேற்று நடைபெற்ற கடற்றொழிலாளர்கள் கூட்டம் ஒன்றில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

'டைனமைட்' வெடிகளை கைவசம் வைத்திருப்பவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் அவற்றை குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. (ஒ-51)

பாடசாலை மாணவர்களுக்கு

## மதிய போசனத்துக்குப் பதில் தினசரி உணவு முத்திரை!

கொழும்பு பெப் 26
மதிய போசனத்துக்குப் பதிலாக மாணவருக்கு உணவு முத்திரை வழங்கும் திட்டம் எதிர்வரும் மேமாதம் முதல் அமுல் நடத்த இருப்பதாக தெரியவருகிறது.

நாள் ஒன்றுக்கு மூன்று ரூபா வீதம் உணவு முத்திரை வழங்கப்படும்.

மாணவர் பாடசாலைக்கு சமுகமளிக்கும் தினங்களுக்கு ஏற்ப வழங்கப்படும் இம் முத்திரைகளை கூட்டுறவுக் கடைகளில் சமர்ப்பித்து உள்ளூர்உற்பத்திப் பொருள்களை பெற்றுக்கொள்ளலாம்.

மதிய உணவுக்குயழங்கப்படும் பணம்தொடர்பாகஇடம் பெறும் மோசடிகளைத் தவிர்க்கவே இப்புதிய திட்டம் கொண்டுவரப்படுகின்றது. (ஒ-எ)

## கோணேஸ்வரம் வழிபாட்டுக்கு திறப்பு

இதுவரை காலமும் மக்கள் வழிபாட்டுக்காகச் செல்ல முடியாதிருந்த திருமலைக் கோணேஸ்வரர் கோயில் வழிபாட்டுக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

காலை 6 மணிக்கும்காலை 8-15 க்கும் இடையில் தான் கோயிலுக்குள் செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-37)

## அந்தரத்தில் தொங்கும் தேசிய முன்னணி அரசு!

### ஜெயலலிதா வர்ணனை

பழனி, பெப் 24
மத்தியில்உள்ள தேசிய முன்னணி அரசு அந்தரத்தில் தொங்கிக் கொண்டுள்ளது. அது விரைவில் கவிழும்.

இப்படிஅ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா பழனியில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசியபோது கூறினார்.

தேசிய முன்னணி அரசு அனைத்துத் துறைகளிலும் செயற்படத் தவறிவிட்டது. அது இப்போது முற்றிலும் வகுப்புவாத சக்திகள் மற்றும் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்திரா காங்கிரஸால் தான் ஸ்திரமான ஆட்சியை அமைக்க முடியும் என்றும் ஜெயலலிதா சொன்னார்.

உடல் நலக்குறைவு காரணமாக பாண்டிச்சேரி சட்டசபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வதை செல்வி ஜெயலலிதா கடைசி நிமிடத்தில் ரத்துச்செய்து விட்டார். (எ)

### தனியார்..

(5-ம்பக்கத் தொடர்ச்சி)
னர் ஒன்றியத்திற்குத்தெரிவிக்கவேண்டுமெனவும் மூன்றாம் கட்டமாகவே ஒன்றியப் பிரதிகளுடன் சம்பந்தப்பட்ட இயக்க உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டது. (இ-118)

## இன்று வேலை நிறுத்தம்

குருநகர், பெப். 26
யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் இயங்கும் மீன் தூள் அரைக்கும் ஆலை, பனிக்கட்டி ஆலை, சங்கு ஏற்றுமதிப் பகுதியில் வேலை பார்க்கும் அறுபதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்று உத்தேச வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபடுவர் எனத் தெரியவந்தது.

தொழிலாளர் அங்கம் வகிக்கும் வர்த்தக, கூட்டுறவு ஊழியர் சங்கம் 500 ரூபாவுக்கும் குறையாத சம்பள உயர்வுக் கோரிக்கை முன் வைத்திருந்தது.

அதற்கு நிர்வாகம் 400 ரூபா சம்பள உயர்வு தருவதாக எழுத்து மூலம் உறுதி அளித்திருந்தது. அது நிறைவேற்றப்படாததாலேயே தொழிலாளர்கள் இன்று வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்ததாக சங்கத் தலைவர் டானியல் அன்ரனி தெரிவித்தார். [ஒ-51]

## நியமனம்

கிளிநொச்சி பெப் 26
கிளிநொச்சி கல்விமாவட்ட பிரதி கல்விப் பணிப்பாளராக திரு. சி. வேலாயுதம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பதவி ஏற்பு!

பம்பாய், பெப் 25
மணிப்பூர் மாநிலத்தில் ஐக்கிய முன்னணி அமைச்சரவை பதவி ஏற்றது.

முன்னணியில் உள்ள மணிப்பூர் மக்கள் கட்சியைச்சேர்ந்த திரு. ஆர். கே. ரன்பீர்சிங் முதலமைச்சராக பதவி ஏற்றார். (உ-எ)

## அகதிகள் முகாம் மாற்றம்

சென்னை, பெப் 25
இலங்கைத் தமிழ் அகதிகளின் வருகையை உத்தேசித்து மண்டபம் அகதி முகாமில் இருந்து சில அகதிகள் திருச்சி க்குஅருகில் கோட்டப்பட்டு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (உ-எ)

## செஞ்சிலுவை உதவி

முல்லைத்தீவு, பெப் 26
முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபரின் பிரிவில் உள்ள தண்ணீரூற்று பூநண் வயல் கிராமத்தில்வன்செயல் காரணமாக வெளியேறி மீண்டும் வந்துள்ள குடும்பங்களின்குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு முல்லைத்தீவு மாவட்டச் செஞ்சிலுவைச்சங்கம் ஐந்து கிணறுகளை வெங்டிக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது. (க-90)


## மரண அறிவித்தல்

### திருமதி பவானி பொன்னையா

சங்குவேலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னையாவின் அன்பு மனைவி பவானி 24-02-1990 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (Asst. Commissioner of Labour), சண்முகநாதன் (எழுத்தாளர்), மகேஸ்வரி (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), ஈஸ்வரதாசன் (காணிப் பதிவகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவரூபி, இராஜகோபால் (Accounting Services And Systems Ltd.,Colombo), வசந்தலீலாதேவி, சறோஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், ரோகிணி, திருக்குமரன், திருமாறன், யாழினி, சாலினி, ரேவதி, மயூரன், கலைமதி, வானதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 26-02-1990 திங்கட்கிழமை பகல் 12-00 மணியளவில் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். [11878]

தகவல்:
பொ. ஈஸ்வரதாசன்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26 - 02 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org